பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

25 07 2026 SATURDAY 6.30 PM

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) மத்திய அமைச்சர்களுடனான பேச்சுவார்த்தைக்கு பிறகு, தில்லியில் நடத்திவந்த போராட்டத்தை வாபஸ் பெறுவதாக CJP அறிவித்துள்ளது.

2) மத்திய கல்வி அமைச்சர் பதவியை தாம் ராஜினாமா செய்துள்ளதாக திரு தர்மேந்திர பிரதான் அறிவித்துள்ளார்.

3) தமிழகத்தில் மின் கட்டணம் உயர்த்தப்படவில்லை என்று மாநில மின்துறை அமைச்சர் திரு நிர்மல்குமார் தெரிவித்துள்ளார்.

4) காவிரி உரிமை தொடர்பான பேச்சுவார்த்தைக்கு முதலமைச்சர் திரு விஜய், கர்நாடகா செல்லும் முயற்சியை கைவிட வேண்டும் என்று திமுக தலைவர் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

5) காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியின் குத்துச்சண்டை பிரிவில் இந்தியாவின் Sachin Siwach காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

- இனி விரிவான செய்திகள்-

<<<<<<<>>>>>>

மத்திய அமைச்சர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைக்கு பிறகு, போராட்டத்தை வாபஸ் பெறுவதாக CJP அறிவித்துள்ளது.

புதுதில்லியில் மத்திய அமைச்சர்கள் திரு ஜெ பி நட்டா, திரு ஜிதேந்திர சிங் ஆகியோருடன் மூன்றாவது கட்டமாக நடத்திய பேச்சுக்களுக்கு பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய CJP பிரதிநிதிகள், இதனை அறிவித்தனர்.

போராட்டக்காரர்கள் மீதான வழக்குகளை வாபஸ் பெறுவதாக மத்திய அரசு அளித்துள்ள உறுதியை ஏற்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டா, நீட் தேர்வு காரணமாக பாதிக்கப்பட்டு உயிரை மாய்த்துக் கொண்ட மாணவர்களின் குடும்பத்தினருக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

இம்முடிவையடுத்து தில்லி ஜந்தர்மந்தரில் நீண்ட நாட்களாக நடைபெற்றுவந்த போராட்டம் உடனடியாக வாபஸ் பெறப்பட்டது.

<<<<<<<>>>>>>

மத்திய கல்வி அமைச்சர் பதவியை தாம் ராஜினாமா செய்துள்ளதாக திரு தர்மேந்திர பிரதான் அறிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதற்கான கடிதத்தை பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு அனுப்பியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்களின் நலனை கருத்தில்கொண்டும், தேச விரோத சக்திகள் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்வதை தடுக்கும் நோக்கிலும் தாம் இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மே 3-ஆம் தேதி நடைபெற்ற நீட் தேர்வின் வினாத்தாள் வெளியானதையடுத்து, அந்த தேர்வை உடனடியாக ரத்து செய்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதில் தொடர்புடையவர்களை கைது செய்யப்பட்டு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசுவுக்கு, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், திரு ராமதாஸ் நீண்ட ஆயுளுடனும், உடல் நலத்துடனும் சமூகப்பணி ஆற்ற வேண்டும் என்று கூறியுள்ளார். திரு ராமதாஸுக்கு, பிறந்த நாளுக்கு முதலமைச்சர் திரு விஜய்யும் பிறந்த நாள் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

மின் கட்டண கணக்கீட்டில் ஏற்பட்டுள்ள தவறுகள் சரிசெய்யப்படும் என்று மாநில மின்துறை அமைச்சர் திரு நிர்மல்குமார் தெரிவித்துள்ளார். தேனியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மின் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளதாக சமூக வலைதளங்களில் வெளியான தகவல் தவறானது என்று கூறினார்.

<<<<<<<>>>>>>

தேர்தலின்போது தவெக அளித்த வாக்குறுதிகள் கட்டாயம் நிறைவேற்றப்படும் என்று மாநில நலத்துறை அமைச்சர் திரு தென்னரசு தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் இன்று பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளை வழங்கி பேசிய அவர், மக்கள் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

மக்களின் கோரிக்கைகளை அமைச்சர்களிடமோ அல்லது மாவட்ட ஆட்சியரிடமோ தெரிவித்தால் உடனுக்குடன் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு தென்னரசு தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

காவிரி உரிமை தொடர்பான பேச்சுவார்த்தைக்கு முதலமைச்சர் திரு விஜய், கர்நாடகா செல்லும் முயற்சியை கைவிட வேண்டும் என்று திமுக தலைவர் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், காவிரி போன்ற தமிழகத்தின் தலையாய பிரச்சினைகளில் அனைத்துக்கட்சிகளின் ஆலோசனைகளையும், விவசாய சங்கங்களின் கருத்துகளையும் பெற்ற பின்பு அதற்கேற்ப தமிழக அரசு செயல்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

காவிரி நீர் உரிமை பங்கீட்டில் தமிழகத்தின் சட்டப்பூர்வமான உரிமைகளை நிலைநாட்ட வேண்டும் என்றும், இதற்கு இப்பிரச்சினைகளை முழு அளவில் புரிந்துகொண்டு செயல்பாடுகளை தீர்மானிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழகத்திற்கு காவிரி நீரை தர கர்நாடகம் மறுத்தால் அது நீதிமன்ற அவமதிப்பு; சட்ட மீறல் என்றும், மேகதாது அணை கட்ட முயற்சிப்பது உச்சநீதிமன்ற இறுதி தீர்ப்புக்கு எதிரானது என்று புரிந்துகொண்டு செயல்பட வேண்டும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் தேசிய நெல் திருவிழா இன்று தொடங்கியது.

இதில், 174 வகையான பாரம்பரிய நெல் வகைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் வரும் ஏழு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாநில அமைச்சர் திரு மதன்ராஜா, புதிய மின்னணு குடும்ப அட்டைகள் மற்றும் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு இன்று வழங்கினார்.

-------------

கோவை மாநகராட்சியில் சுமார் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட உள்விளையாட்டு அரங்கம், அங்கன்வாடி மையங்கள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளிட்டவற்றை மாநில அமைச்சர் திரு சம்பத்குமார் இன்று திறந்துவைத்தார்

-------------

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் நகராட்சி அலுவலகத்தில், வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாநில அமைச்சர் திரு வன்னியரசு தலைமையில் இன்று நடைபெற்றது.

--------------

திருச்சி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்கள் குறித்து மாநில அமைச்சர் திரு ரமேஷ், ஆட்சியர் திரு பிரதீப் தயாளுடன் இன்று, ஆலோசனை மேற்கொண்டார்.

----------------

தூத்துக்குடி மாவட்டத்தில் சுற்றுலாத்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை சுற்றுலா வளர்ச்சிக்கழக மேலாண்மை இயக்குநர் திரு ஜெயசீலன் இன்று ஆய்வு செய்தார்.

--------------------

திருவண்ணாமலை மாநகராட்சியில் தெரு நாய்களுக்கு தடுப்பூசி செலுத்தும் பணிகளை ஆட்சியர் வந்தனா கார்க் நேரில் பார்வையிட்டார்.

-----------

மதுரையில் நடைபெற்ற தூய்மை பணியாளர்களுக்கான அரசு சேவைகள் மற்றும் நலத்திட்ட முகாமை மாநகராட்சி ஆணையர் திரு கௌரவ் குமார் இன்று ஆய்வு செய்தார்.

-------------

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள இந்திய தகவல் தொழில்நுட்பம் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி நிறுவனத்தின் 14-ஆவது பட்டமளிப்பு விழா இன்று நடைபெற்றது.

<<<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

Glasgow-வில் நடைபெற்றுவரும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியின் குத்துச்சண்டை பிரிவில் இந்தியாவின் Sachin Siwach காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் 60 கிலோ எடைப்பிரிவில் அவர், கனடாவின் Keoma Al – Ahmadieh-ஐ வென்றார்.

------------------

ஆசிய இளையோர் ஐவர் மகளிர் ஹாக்கிப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று கஜகஸ்தானை எதிர்கொள்கிறது.

மஸ்கட்டில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

<<<<<<<END>>>>>>